ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2164/52 - 2020 පෙබරවාරි මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.27

2164/52 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, மத்திய மாகாண சபையின் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம்**

1 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் தினம்

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே ஆகிய நான், மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் 1 ஆம் பிரிவின் கீழ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 (இ) யாப்பின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய 2018.10.05 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட மத்திய மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம் 2019, ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து அமுலாக்கப்படும் என்பதை அறிவிக்கின்றேன்.

சட்டத்தரணி லலித் யூ. கமகே,
மத்திய மாகாண ஆளுநர்.

**மத்திய மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, மத்திய மாகாண சபையின் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம்**

26 ஆம் பிரிவின் கீழான கட்டளை

மத்திய மாகாணத்தின் ஆளுனர் லலித் யூ கமகே ஆகிய நான், மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் 26(2) (1) (அ) ஆம் அத்தியாயத்தின் கீழ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 (இ) ஆம் யாப்பின்

பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களுக்கு அமைய மத்திய மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம் மற்றும் தன்னார்வசிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் நிறுவுதல் தொடர்பில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச தர நிர்ணயங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விதிக்கின்றேன்.

சட்டத்தரணி லலித் யூ. கமகே,
மத்திய மாகாண ஆளுநர்.

**தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் சேவையின் தரங்களை மேம்படுத்துவதற்காக பொதுவான தரநிர்ணயம் விதித்தல்**

**1. கட்டிடங்கள் இடவசதிகள் மற்றும் சுற்றுப் புற சூழல் பற்றிய தர நிர்ணயங்கள்**

1.1 ஒரு பிள்ளைக்கு ஏறத்தாள 36 சதுர அடியைக் கொண்ட அடிப்படையில் நித்திரை கொள்வதற்கான வசதிகளையும் ஒவ்வொரு பிள்ளைக்கென கட்டில் ஒன்றும், நுளம்பு வலை ஒன்றும் இருத்தல் வேண்டும். தேவைக்கு ஏற்ப கட்டில் மின் குமிழ் ஒன்றும் இருத்தல் வேண்டும். அடுக்கு அமைப்பிலான கட்டில்கள் பயன்படுத்தப்படுமாயின் அது பாதுகாப்பு வேலி ஒன்றுடனானதாக இருத்தல் வேண்டும்.

1.2 உணவு உட்கொள்வதற்காக, கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இளைப்பாறுவதற்காக, விருந்தினர்களை சந்திப்பதற்காக அதிகபட்ச மாணவர்களுக்கு போதுமான அளவிலான இடவசதி நித்திரை கொள்வதற்கான இடவசதியினை விட மேலதிகமான இட வசதிகள் கட்டிடங்களில் அமைந்திருத்தல் வேண்டும். கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அதற்குத் தேவையான மேசைகள், கதிரைகள் என்பன இருத்தல் வேண்டும். குறித்த அனைத்து இடங்களுமே சுத்தமாகப் பேணப்படல் வேண்டும். தேவை ஏற்படுமிடத்து சுத்தப்படுத்துவதற்காக கிருமி நாசினிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

1.3 சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்குப் போதுமான அளவில் சூரிய ஒளி, காற்று கிடைக்ககூடிய வகையில் பரப்பளவில் 1/7 என்ற அளவின் அடிப்படையில் யன்னல், கதவுகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

1.4 பணியாளர்களுக்குப் போதுமான இட வசதிகள் வேறாக இருத்தல் வேண்டும். அதைத் தவிர இரவு நேரங்களில் பிள்ளைகளுடைய தேவைகள் பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு இலகுவான வகையில் விடுதிக்காப்பாளர்களின் அறையானது சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் அறைக்கு அருகில் அமைந்திருத்தல் வேண்டும்..

1.5 கட்டிடங்களைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருத்தல் வேண்டும். சூழவுள்ள வீட்டுத் தோட்டத்தை சிறுவர் இல்லத்திற்கு பயன் தரக் கூடிய வகையிலும் நடாத்தி செல்லல் வேண்டும்.

1.6 சிறுவர் அபிவிருத்தி இல்லத்தின் தேவைகளுக்கு போதுமான அளவில் நீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும். பிள்ளைகளின் உயரத்தை கவனத்திற் கொண்டு அதற்கேற்ப முகம் கழுவுவதற்கான பாத்திரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1.7 கிணற்றிலிருந்து நீர் பெறப்படுவதாயின், அதனைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டு வலைகளால் முடப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

1.8 பிள்ளைகளும், ஊழியர்களும் பாதுகாப்பான அடிப்படையில் குளிப்பதற்கான வசதிகள் இருத்தல் வேண்டும். அது தவிர குளியலறைகள், மலசல கூடங்கள் என்பன வேறு வோறாக அமைத்திருத்தல் வேண்டும்.

1.9 தங்கியுள்ளவர்கள் 8 பேருக்கு ஒரு மலசல கூடம் என்ற அடிப்படையில் இருக்க வேண்டியதுடன், அவற்றையும் நீர் வடிந்தோட அமைக்கப்படுகின்ற காண்களையும் கிருமி நாசினிகள் பயன்படுத்தி சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

1.10 சிறுவர் அபிவிருத்தி இல்லத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ற அடிப்படையில் இரவு நேரங்களில் போதுமான வெளிச்சம் வழங்கப்பட வேண்டும். மின்சாரம் துண்டிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாற்றீடாக பயன்படுத்த முடியுமான சாதணங்கள் (மின் சேமித்து வைத்து எரிகின்ற மின்குமிழ்கள், டோச் லைட்கள், மின் சக்தியைச் சேமித்து வைத்து சுயமாக இயங்கும் மின்குமிழ்கள், லந்தர் என்பன) இருக்க வேண்டும் என்பதுடன் அவை போதுமான அளவில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

1.11 மின் வயர் மற்றும் கேபல்கள் என்பவற்றை பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

1.12 இலகுவில் தீபற்றக் கூடிய அனைத்துப் பொருட்களையும் பிள்ளைகளுக்கு எட்டாத இடங்களில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். ஏற்படக்கூடிய விபத்துக்களிலிருந்து அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும்(பாதுகாப்பற்ற இடங்கள்)

**2. உணவு வகைகளின் தர நிர்ணயங்கள்**

2.1 தங்கியுள்ளவர்களுடைய வயதிற்கும் சுகாதார நிலைமைகளுக்கும் ஏற்றவகையிலான அளவுகளிலும் அவசியமான போசனை மட்டத்தைப் போதியளவில் பெற்றுக் கொள்ளக்கூடியவில் உணவு வழங்கப்படல் வேண்டும்.

2.2 குறித்த வயதெல்லைகளுக்கு ஏற்ப உணவுகள் தொடர்பான குறிப்புகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2.3 அன்றாடம் வழங்கப்படுகின்ற உணவு வகைகளை அதன் அளவுகள் என்பவற்றை குறிப்பிடுகின்ற அடிப்படையிலான பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். (வாரத்தில் வழங்கப்படும் உணவுப் பட்டியல் தகுந்த இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்)

2.4 தங்கியிருப்பவர்கள் அனைவருக்கும் ஒரு வாரத்திற்கு போதுமான அளவில் அரிசி, தேங்காய், சீனி, மா, பலசரக்கு என்பனவும் 3 நாட்களுக்குத் தேவையான மரக்கறி வகைளும் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். பிள்ளைகளின் விருப்பங்களுக்கு அமைய பல்வேறு விதங்களில் உணவு வகைகள் அமைய வேண்டும்.

2.5 பாடசாலை செல்கின்ற பிள்ளைகளுக்கு பாடசாலையிலிருந்து உட்கொள்வதற்காக மேலதிக உணவை தயாரித்துக் கொடுத்தல் வேண்டும். அல்லது ஒவ்வொரு பிள்ளைக்கும் தேவையான மேலதிக உணவைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படல் வேண்டும்.

**3. பிள்ளைகளின் ஆடைகள் குறித்த தர நிர்ணயங்கள்:**

3.1 ஒவ்வொரு பிள்ளைக்கும் கட்டில் விரிப்புகள் 02 உடன், போர்வைகள், டவல்கள், பற் தூரிகைகள், பற்பசைகள் என்பவற்றை தேவையான அடிப்படையில் பெற்றுக்கொடுத்திருத்தல் வேண்டும். அதே போன்று ஒவ்வொரு பெண்பிள்ளைக்கும் தேவைக்கு ஏற்ற வகையில் நெப்கின்கள் வழங்கப்படல் வேண்டும்.

3.2 ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் அணிவதற்காக குறைந்த பட்சம் 05 தொகுதி உடைகளும், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடை 03 தொகுதிகளும் வைபவங்களின்போது அணிவதற்கு பொருத்தமான உடைகள் 02 தொகுதிகளும் குறைந்த பட்ச அளவில் இருத்தல் வேண்டும். (குறித்த உடைகள் ஒரே நிறத்தில் அல்லது ஒரே வடிவமைப்புக்களில் இல்லாமல் பல்வேறுபட்ட வகையானதாக இருக்க வேண்டும் என்பதுடன் கால நிலைக்கு ஏற்ற அடிப்படையிலும் இருத்தல் வேண்டும்.)

3.3 ஒவ்வொரு ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்காகவும் குறைந்த பட்சம் 05 என்ற அடிப்படையில் உள்ளாடைகள் பெற்று கொடுத்தல் வேண்டும்.

3.4 சகல பிள்ளைகளுக்கும் குறைந்தளவு சப்பாத்து, மேஸ்கள் இரண்டு தொகுதிகளாவது இருக்க வேண்டும்.

3.5 பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்ற கட்டில் விரிப்புகள், டவல்கள், போர்வைகள், சிறுவர்களின் ஆடைகள் என்பவற்றை டெடோல் போன்ற கிருமி நாசினிகளைப் பயன்படுத்தி சுத்திகரித்தல் வேண்டும் என்பதுடன் பெண்களுக்கு வழங்கப்படும் நெப்கின் போன்ற பொருட்களை(Pad) அப்புறப்படுத்துவதற்கு பொருத்தமான முறையொன்று அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டும்.

**4. உபகரணங்கள் குறித்த தர நிர்ணயங்கள் :**

(அ) வீட்டுத் தளபாடங்கள்

4.1 வயது 6 இற்கு மேட்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளினது ஆடைகள், புத்தகங்கள் மற்றும் அவர்களது தனிப்பட்ட பொருட்களை வைத்துக் கொள்வதற்காக ஒரு அலுமாரி வீதம் இருத்தல் வேண்டும்.

4.2 வயது 6 இற்குக் குறைந்த பிள்ளைகளுடைய ஆடைகளையும் ஏனைய உபகரணங்களையும் வைத்துக் கொள்வதற்கு பொதுவான அலுமாரி ஒன்று இருத்தல் வேண்டும்.

4.3 தங்கியுள்ள பிள்ளைகள் உணவு உண்பதற்கு, படிப்பதற்குப் போதியளவு மேசைகள் கதிரைகள் இருத்தல் வேண்டும். உணவு உண்பதற்காக 8 பிள்ளைகளுக்கு ஒரு மேசை என்ற விகிதத்தில் அமருவதற்கான பொருத்தமான ஆசனங்கள் இருத்தல் வேண்டும்.

4.4 ஒவ்வொரு பிள்ளைகளுக்காகவும் கோப்பைகள், பீங்கான்கள் என்பனவும் அவசியப்படுமிடத்து உணவு உட்கொள்வதற்கான கரண்டிகள் இருத்தல் வேண்டும்.

4.5 இலகுவாகப் பிரவேசிக்கக் கூடிய வகையில் பீங்கான கோப்பைகளை கழுவுவதற்கான வசதிகளை செய்யப்படல் வேண்டும்.

4.6 தேவைக்கு ஏற்றவாறு குழந்தைகளுக்குத் தேவையான பால் போத்தல்கள் அவற்றுக்கான சூப்பிகள் என்பன வெவ்வேறாகவும்,ஒவ்வொரு குழந்தைகளுக்கும் ஒவ்வொரு தொட்டில் என்ற அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

(ஆ) சமயலறை

4.7 தங்கியுள்ள பிள்ளைகள் அனைவருக்காகவும் உத்தியோகத்தர்களுக்கும் போதுமான அளவில் பொதுவான பொருட்களும் சமயலறைக்குத் தேவையான உபகரணங்களும் இருத்தல் வேண்டும்.

4.8 விறகு, எரிவாயு அல்லது மின்சாரத்தினை சமயலறையின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த முடியும் என்பதுடன், அவற்றைப் பயன்படுத்தப்படும் முறைக்கு ஏற்ப வெவ்வேறு இடங்களைப் பாதுகாப்பான முறையில் அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

(இ) கல்வி உபகரணங்கள்

4.9 பிள்ளைகள் கல்வி கற்கின்ற பாடசாலைகள் மூலமாக குறிப்பிடப்படும் நூல்கள் மற்றும் உபகரணங்களைப் பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

4.10 பிள்ளைகள் ஓய்வு நேரத்தில் வாசிப்பதற்குத் தேவையான நூலக வசதிகள் இருத்தல் வேண்டும்.

4.11 நாளாந்தம் வெளியாகும் செய்தித் தாள்களையும்/ பத்திரிகைகள் மற்றும் வாராந்தம் வெளிவருகின்ற சிறுவர் பத்திரிகைகள் என்பவற்றையும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

4.12 பிள்ளைகளுக்கான பொழுது போக்கு விடயங்களுக்குத் தேவையான உபகரணங்கள் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

(ஈ) பிள்ளைகளுடைய திறமைகளுக்கு ஏற்ற அடிப்படையில் ஓய்வு நேரத்தை பிரயோசனமான வகையில் கழிப்பதற்குத் தேவையான உபகரணங்கள்

4.13 மேலே குறிப்பிடப்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கீழே குறிப்பிடப்படும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்திருத்தல் வேண்டும்.

(1) வானொலிப் பெட்டி.
(2) தொலைக்காட்சிப் பெட்டி
(3) இசைக் கருவிகள்
(4) ஐந்து வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்காக நிர்மாணக் குற்றி, puzzels போன்ற விளையாட்டு உபகரணங்களும் பிள்ளைகளின் உடல், உள மற்றும் சமூக விடயங்களை விருத்தி செய்கின்ற அடிப்படையிலான வெளிக்கள விளையாட்டுக்களுக்கான சாதனங்கள் (ஊஞ்சல், சீசோ, க்லம்பிங் டவர்)
(5) பிள்ளைகளுடைய விருப்பத் தேர்வுகளின் அடிப்பயில் அவர்களது ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்குத் தேவையான தாம் பலகை, செஸ்விளையாட்டு உபகரணங்கள், கெரம் விளையாட்டுப் பலகை, இறப்பர் பந்துக்கள் போன்ற விளையாட்டு உபகரணங்கள்.

(உ) விளையாட்டு, பொழுது போக்கு, கலை சார்ந்த வசதிகள்

4.14 ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலும் தங்கியுள்ள பிள்ளைகளுக்குப் போதுமான அளவில் வெளிக்கள விளையாட்டுகளில் ஈடுபடத் தேவையான விளையாட்டு மைதானமொன்று இருத்தல் வேண்டும்.

4.15 சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு பிரத்தியேகமாக விளையாட்டு மைதானமொன்று இல்லையாயின், வெளியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானம் அல்லது பாடசாலை விளையாட்டு மைதானம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

4.16 சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு போதுமான அளவில் வெளிக்கள விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.17 சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு போதுமான அளவில் உள்ளக விளையாட்டு சாதனங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்

4.18 பிள்ளைகளுக்கு விளையாட்டு மற்றும் கலை சார்ந்த (நடனம், நாட்டியம், இசை, சித்திரம், கைப்பணி) துறைகளை கற்று கொள்வதற்கும் சிறுவர் கழகங்களுக்கும் மதம் சாரந்த விடயங்களில் ஈடுவதற்கான வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## 5. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் முகாமைத்துவம்

(அ) சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் முகாமைத்துவக் குழு

5.1 முகாமைத்துவக் கூட்டங்களின் தேவைக்கு ஏற்ப சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் பராமரிப்பாளர்கள் கட்டாயமாக அழைக்கப்பட வேண்டும்.

5.2 முகாமைத்துவக் குழு தெரிவு செய்ததன் பின்பு குறித்த நியமனம் தொடர்பாக அறிக்கையொன்றை மாவட்டத்தின் சிரேஷ்ட நன்னடத்தைகள் அதிகாரிக்கும், நிலையத்துக்குப் பொறுப்பான நன்னடத்தை அதிகாரிக்கும் பிரதிகளுடன் மாகாண ஆணையாளருக்கும் அறியப்படுத்தப்படல் வேண்டும்.

5.3 முகாமைத்துவக் குழுவின் மூலமாக பிள்ளைகளுடைய வாழ்கையுடன் தொடர்புடைய ஏதேனும் தீர்மானங்களை மேற்கொள்வதாயின் அதற்கு முன்பாக அது விடயம் குறித்து கண்காணிப்பு நன்னடத்தை உத்தியோகத்தர், மாவட்ட சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி, நிலையத்திற்குப் பொறுப்பான நன்னடத்தை அதிகாரி மாகாண ஆணையாளர் மற்றும் போன்றோருடன் கலந்துரையாடப்பட்டு நிறுவல் குழு மூலம் அதைப்பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

5.4 குறைந்த பட்சம் மாதம் ஒரு முறையாவது முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெற வேண்டும் என்பதுடன் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் முகாமைக்குழுக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். அதன் அறிக்கை மாவட்டத்தின் சிரேஷ்ட நன்னடத்தைகள் அதிகாரிக்கும் நிலையத்துக்குப் பொறுப்பான நன்னடத்தை அதிகாரிக்கும் பிரதிகளுடன் மாகாண ஆணையாளருக்கும் தாமதமின்றி அறிவிக்கப்பட வேண்டும்.

5.5 பாடசாலை விடுமுறைக் காலங்களில் அல்லது பிள்ளையினுடைய குடும்பத்தில் நடைபெறுமகின்ற விசேட வைபவங்களுக்காக பிள்ளையை அவர்களது குடும்பத்தவர்களிடம் அனுப்பி வைப்பதற்கான பொறுத்தமான ஏற்பாடுகளையும் வசதிகளையும் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

5.6 சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்குச் சேர்க்கப்பட்ட தினத்திலிருந்து அந்தப் பிள்ளையின் குடும்பத்துடன் உறவுகளைப் பேணிக்கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

5.7 சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பிள்ளைகளுக்காக வழங்கப்படுகின்ற சேவைகளை மேம்படுத்துவதற்காகவும் பிள்ளைகளுடைய உடல் மற்றும் உள ரீதியிலான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தேவையான ஏற்பாடுகளையும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுப்படல் வேண்டும்.

5.8 தேவைகளைப் பூர்த்திசெய்யப்படுகின்ற பிள்ளைகளை மீண்டும் சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

5.9 சிறுவர் அபிவிருத்தி நிலையம் மற்றும் அதில் தங்கியிருக்கின்ற பிள்ளைகள் தொடர்பில் காணப்படுகின்ற விதிமுறைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் நிலையத்தின் அலுவலர் குழு அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும்.

5.10 நிலவுகின்ற சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவும் அவை பின்பற்றப்பட்ட அடிப்படையிலும் சிறுவர் பராமரிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கான சம்பளம் அல்லது கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5.11 சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கியிருக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலன் கருதி கீழ் காணும் சேவைகள் வழங்கப்படல் வேண்டும்:-

1 சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கயிருக்கின்ற பிள்ளைகளின் உணவு மற்றும் ஏனைய தேவைகளை குறித்து ஆராய்தல்.

2 சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பராமரிப்புக்குத் தேவையான நிதியினை திரட்டிக்கொள்வதற்காகவும், நிர்வகித்தல், பிள்ளைகள் நிலையாகத் தங்கியிருக்கச் செய்தல் என்பன தொடர்பாக முறையான திட்டம் ஒன்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3 திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற கட்டளைகள் மற்றும் ஆலோசனைகளுக்கு இணங்க சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்திச் செல்லல் திணைக்களத்திற்கு வழங்க வேண்டிய அறிக்கைகளைத் தவறாது பெற்றுக்கொடுத்தல், சிறுவர் அபிவிருத்தி நிலையம் தொடர்பில் அவ்வப்போது ஏற்படுகின்ற சட்டத் திருத்தங்கள், மற்றும் வெளியிடப்படுகின்ற சுற்று நிருபங்களுங்கு இணங்க திணைக்களத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும்

4 திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவிகள் மற்றும் பராமரிப்பு உதவிகள் தொடர்பான பணம் உரிய முறையில் செலவிடப்படல், அவ்வுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் பரிசீலிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளை திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.12 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படல் வேண்டும்.-

1 அனுமதித்தல் தொடர்பான பதிவேடு
2 நாளாந்த வரவுப் பதிவேடு
3 அலுவலர் குலாமின் வரவுப் பதிவேடு
4 கணக்குப் பதிவேடுகள் (வரவு செலவு பற்றிய விபரம்)
5 லொக் குறிப்பிடுவதற்கான பதிவேடு (திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக)
6 விருந்தினர்களின் குறிப்பேடு
7 பொருட்கள் பதிவேடு
8 உணவுப் பதிவுப் புத்தகம்
9 தங்கியுள்ள பிள்ளைகள் தொடர்பில் ஒவ்வொருவர் தொடர்பிலும் தனிக்கோவை
10 பிள்ளைகளின் மருத்துவ வசதிகள் குறித்த பொதுவான கோவை
11 உள்நாட்டு ரீதியிலாக கிடைக்கின்ற நன்கொடைகள் குறித்த பதிவேடு
12 வெளிநாட்டு ரீதியிலாக கிடைக்கின்ற நன்கொடைகள் குறித்த அட்டவணை
13 களஞ்சியப் பொருட்கள் பதிவேடு
14 சமூகமயமாக்கள் பதிவேடு (தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய).

5.13 திணைக்களத்தின் ஊடாகவும் வேறுவழிவகைகளின் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற பொருட்கள், உபரகணங்கள் குறித்த விவரங்கள் பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்க வேண்டும். அத்துடன் வருடாந்தம் பொருட்கள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

(ஆ) அலுவலர் குழாம் குறித்த தர நிர்ணயங்கள்

5.14 அனைத்து சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலும் இருக்கின்ற பிள்ளைகள் தொடர்பில் முறையான பயிற்சிகள் பெற்ற பிரதான பராமரிப்பாளர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதுடன் அவர் கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

1. குறைந்த பட்சம் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய ஒருவராக இருத்தல் வேண்டும் (தற்பொழுது கடமையில் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது)
2. 30 வயதிற்குக் குறையாதவராகவும் 60 வயதிற்கு மேட்படாதவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நடத்தை உடையவராகவும் நல்ல ஒழுக்கமுடையவராக இருத்தல்வேண்டும்.
4. உடல் ரீதியிலாகவும் உள ரீதியிலாகவும் ஆரோக்கியமானவராகவும் நற்குணம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான ஆளுமையும் பண்புள்ளவராகவும் இருக்க வேண்டும்.
6. குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவைக்கு அமைய குற்றவாளியாகாத ஒருவராக இருத்தல் வேண்டும்.
7. ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சையின் போது சிறுவர் உளவியல் குறித்து போதுமான அறிவாற்றல் உள்ளவர் என்பதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.15 அனைத்து சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலும் இருக்கின்ற பிள்ளைகள் தொடர்பில் முறையான பயிற்சிகள் பெற்ற உதவி பராமரிப்பாளர்கள் இருக்க வேண்டும் என்பதுடன் அவர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும். தங்கியிருக்கின்ற மாணவர் தொகை இருபது (20) வரையாயின் பிரதான பராமரிப்பாளருக்கு மேலதிகமாக குறைந்த பட்சம் ஒரு உதவிப் பராமரிப்பாளரேனும் இருத்தல் வேண்டும். இருபது பிள்ளைகளுக்கு அதிகரிக்கின்ற போது ஒவ்வொரு பத்து (10) பிள்ளைகளுக்கு ஒரு பராமரிப்பாளர் என்ற அடிப்படையில் இருத்தல் வேண்டும். எனினும் பத்துபேருக்கு குறைந்த அளவிலானவர்களுக்கு வசதிகள் வழங்க முடியுமானதாக வேறு வேறாக அமைந்திருக்கும் தங்குமிடம் ஒன்றிற்காக பராமரிப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்

1. குறைந்த பட்சம் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய 05 பாடங்களில் சித்தியடைந்த ஒருவராக இருத்தல் வேண்டும் (தற்பொழுது கடமையில் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது)
2. அவர் 30 வயதிற்கு மேற்பட்டவராகவும் 60 வயதிற்குக் குறைந்த ஒருவராக இருத்தல் வேண்டும்
3. சிறந்த நடத்தை உடையவராகவும் நல்ல ஒழுக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டும்
4. உடல், உள ரீதியிலான ஆரோக்கியமானவராகவும் நற்குணமுடையவராகவும் இருத்தல்
5. பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான ஆளுமையும் பண்புள்ளவராகவும் இருக்க வேண்டும்.
6. குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவைக்கு அமைய குற்றவாளியாகாத ஒருவராக இருத்தல் வேண்டும்.
7. ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சையின் போது சிறுவர் உளவியல் குறித்து போதுமான அறிவாற்றல் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

5.16 பிரதான பொறுப்புடைய பராமரிப்பாளர் மற்றும் உதவிப் பராமரிப்பாளர்கள், திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பயிற்சி நெறிகளில் பங்குபற்ற வேண்டும்.

5.17
1. பிரதான பொறுப்புடைய பராமரிப்பாளர் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. ஆண் பிள்ளைகளுக்கு பராமரிப்பு வழங்கப்படுகின்ற சிறுவர் பாதுகாப்பு நிலையங்களில் சேவையாற்றுவதற்காக ஆண் பிரதான பரமரிப்பாளரும் உதவிப் பெண் பராரிப்பாளர்களும் இருத்தல் வேண்டும் என்பதுடன் பெண் பிள்ளைகளுக்கு மாத்திரம் பராமரிப்பு வழங்கப்படுகின்ற நிலையமாயின் பெண் பிரதான பரமரிப்பாளரும் உதவிப் பெண் பராரிப்பாளரும் இருத்தல் வேண்டும்.

5.18 பிரதான பராமரிப்பாளர் மற்றும் உதவிப் பராமரிப்பாளர்களில் யாரேனும் பயிற்சி பெறாதவர்கள் இருப்பார்களாயின் திணைக்களத்தின் மூலமாக அவ்வப்போது நடாத்தப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகளில் கலந்து கொண்டு பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

(இ) சுகாதார சேவைகளும் பாதுகாப்பும் குறித்த தர நிலைகள்

5.19 சிறுவர்களுடைய மருத்துவ தேவைகள் தொடர்பில் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு வருகை தந்து விசாரிப்பதற்கும், அம்மருத்துவ நிலையங்களுக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சுகாதார திணைக்களத்தின் அல்லது தனியார்மருத்துவர் ஒருவரை சந்தித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

5.20 பிள்ளைகளுக்கு தேவையான தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும்.

5.21 சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றில் பிரவேசிக்கும் போது அனைத்து பிள்ளைகளுக்கும் வைத்திய அறிக்கை ஒன்றும் மன நிலை அறிக்கையொன்றும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பிள்ளையையும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனைக்கு உற்படுத்தி அது விடயம் குறித்து பிள்ளையின் சுயவிபரக் கோவையில் குறிப்பிடப்படல் வேண்டும். பிள்ளையின் உயரம், நிறை, அடையாளங்கள் குறித்து அதில் குறிப்பிடுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.22 மருத்துவ அறிக்கைக்கு இணங்க போஷாக்கின்மையால் பாதிக்கப்படுகின்ற பிள்ளைகள் இருப்பார்களாயின் அவர்களின் போஷாக்கை மேம்படுத்துவதற்கு போஷாக்கு நிலையங்களுக்கு அனுப்புவதற்காக,அதற்கான வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

5.23 பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத பிள்ளைகளுக்கு அநுமானிக்கப்பட்ட வயதுச் சான்றிதழ் ஒன்றைப் பெற்று கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பிள்ளையை மருத்துவரிடம் காட்டிய மருத்துவ அறிக்கை பெற்றுக் கொண்டு குறித்த அநுமான வயதுச் சான்றிதழைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5.24 ஒவ்வொரு பிள்ளையினதும் தலை முடிகளில் பேன்கள் காணப்படுகின்றதா என்பது குறித்து அவதானித்து அவ்வாறு இருக்குமாயின் அதற்கான முறையான சிகிச்சைகள் வழங்கப்படவேண்டும்.

5.25 தலைமுடியை வெட்டி சுத்தப்படுத்த வேண்டுமென்றால் பிள்ளைகளின் தலை முடியை சிறந்த முறையில் வெட்டிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

5.26 ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலும் குறைந்தது ஒரு முதலுதவிப் பெட்டியாயினும் இருத்தல்வேண்டும். மருத்துவர் ஒருவரால் சிபாரிசு செய்யப்பட்ட மருந்துப் பொருட்களை அங்கு வைத்திருத்தல் வேண்டும். அலுவலர் குழுவில் எவரேனும் ஒருவர் அவ்விடத்திற்கு இலகுவாக பிரவேசிக்கக் கூடிய இடத்தில் முதலுதவிப் பெட்டியை வைத்திருத்தல் வேண்டும். (மருத்துவப் பொருட்களை இலகுவாக அடையாளம் கண்டுகொள்ளக் கூடியளவில் பெயரிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் காலம் கடந்த மருந்துகள் குறித்த காலாவதியாகும் தினத்திற்கு முன்னர் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் பிள்ளைகள் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லாதிருக்கவேண்டும்.)

5.27 தங்கியுள்ள ஒரு பிள்ளைக்கு அல்லது பிள்ளைகளுக்கு தொற்று நோய்கள் அல்லது வேறொரு நோய் ஏற்படும்போது, அப்பிள்ளையை ஏனைய பிள்ளைகளிடமிருந்து வேறுபடுத்தி வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதோடு, அத்தகைய மாணவர்களுக்கென ஓய்வுக்கான அறையொன்று வேறுபடுத்தி வைக்க வேண்டும்.

5.28 ஒரு பிள்ளைக்கு தொற்று நோய்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அந்நோய் ஏனைய பிள்ளைகளுக்கு ஏற்படுவதை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும்.

5.29 சிறுவர் அபிவிருத்தி நிலையமானது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் சுகாதார சேவை அதிகாரியினதும் குடும்ப சுகாதார சேவை அதிகாரியினதும் கண்காணிப்புக்கு உட்படுத்தி அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

(ஈ) கல்விச் சேவை குறித்த தர நிர்ணயங்கள்

5.30 வயது 06 க்கு மேற்பட்ட மாணவர்களை ஏற்றுக் கொள்ளப்பட்ட பாடசாலை ஒன்றுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு பாடசாலைக்கு அனுப்ப முடியாத நிலையில் பிள்ளைகள் இருப்பார்களாயின் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மூலமாக நிறுவனத்திற்கு உள்ளேயே கல்வி கற்பதற்கு

வாய்ப்பளித்தல் வேண்டும். அதே போன்று வயது 05 இற்கு குறைந்ததும் வயது 03க்கு கூடியதுமான அனைத்து மாணவர்களையும் பக்கத்திலுள்ள முன்பள்ளி ஒன்றில் சேர்ப்பதற்கு அல்லது அவ்வாறான பிள்ளைகளுக்கு முன்பள்ளியொன்றை நடாத்திச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

5.31 சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பிள்ளைகள் கல்வி கற்கின்ற பாடசாலைகளோடு தொடர்புகொண்டு பிள்ளைகளின் நடத்தைகள் குறித்தும் கல்வித் தரத்தில் ஏற்படுகின்ற முன்னேற்றம் குறித்து பகுப்பாய்வுகளை மேற்கொண்டு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.32 சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினுள் நேர அட்டவணை அமைக்கப்பட்டு நாளாந்தம் படிப்பதற்கும் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் நேரம் ஒதுக்கப்படல் வேண்டும்.

5.33 தேவைப்பாடுகளுக்கு அமைய பிள்ளைகளுக்கு ஏதேனும் தொழிற் பயிற்சி ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.34 விசேடமாக 14 வயதைத் தாண்டிய கல்வி சார்ந்த சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்ற அல்லது ஏதாவது ஒரு தொழில் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காக ஊக்கம் காட்டுகின்ற அல்லது அதற்கான திறமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பிள்ளைகளுக்காக தொழிற்பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்திருத்தல் வேண்டும்.

திணைக்களத்தின் நிதி உதவியோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட தொழில் பயிற்சி நிலையங்கள் காணப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு பொருத்தமான பிள்ளைகளை அனுப்பி வைப்பதற்காக மாகாண ஆணையாளருடைய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அரசினால் நடாத்தப்படுகின்ற தொழில் பயிற்சி பாடநெறிகளை கற்பதற்கான சந்தர்ப்பத்தை பிள்ளைகளுக்கு பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

(உ) பிள்ளைகளின் வளர்ச்சியுடன் தொடர்புடைய விசேட சேவைகள் குறித்த தர நிர்ணயங்கள்

5.35 ஒவ்வொரு பிள்ளைகள் தொடர்பிலும் நடாத்தி செல்லப்படுகின்ற விடயக் கோவைகளில் பிள்ளைகளை குறித்து மாதம் ஒரு முறையேனும் குறிப்புகள் பதியப்படல் வேண்டும்.

5.36 ஒவ்வொரு பிள்ளைகளினதும் விடயக் கோவைகளில் கீழ் குறிப்பிடப்படுகின்ற ஆவணங்களுடன் குறிப்புகளும் பதியப்படல்வேண்டும்.

1. நன்னடத்தை உத்தியோகத்தரின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையின் பிரதியொன்று
2. நன்.பி.சே 49 (ப்ராபோமா) படிவத்தின் பிரதி
3. பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ், அல்லது அனுமான வயதுச் சான்றிதழ்.
4. மருத்துவ அறிக்கைகள் / தடுப்பூசி ஏற்றவேண்டிய தினங்கள் / விசேட சிகிச்சையளித்தல்.
5. பிள்ளையின் பாடசாலைச் சான்றிதழ்கள்.
6. சமுர்த்திக் கொடுப்பனவை பெற்றுக் கொள்வது தொடர்பான குறிப்புகள்.
7. பிள்ளையின் உயரம், நிறை மற்றும் வளர்ச்சி பற்றிய குறிப்புகள்.
8. பிள்ளையின் உடல்/ உள ஆரோக்கியம் மற்றும் ஆண்மிக நிலைப்பாடும் அதனது வளர்ச்சி தொடர்பான குறிப்புகள்
9. பெற்றோர்களை மற்றும் பாதுகாவலர்களை சந்தித்தல் தொடர்பான குறிப்புகள்.
10. நடத்தைகள் தொடர்பில் நன்னடத்தை உத்தியோகத்தர்களோடு கலந்துரையாடல் நடாத்துதல் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான குறிப்புகள்.
11. நிறுவுதல் குழுவின் விசேட தீர்மானங்கள் பற்றிய குறிப்புகள்.
12. பிள்ளையின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆவணங்களை அடையாளம் காண்பதும் கோவையில் உள்ளடக்குவது தொடர்பான குறிப்புக்கள்
13. நன்.பி.சே 50 (ப்ராபோமா) படிவத்தின் பிரதி
14. சமூக மயப்படுத்தல் தொடர்பான ஆணையாளரின் அனுமதி (கோவையை நிறைவு செய்யும் முன்)

6. நிறுவுதல்:

6.1 நிறுவுதல் குழு

சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பிள்ளைகள் தொடர்பாக தேவையான தீர்மானங்கள் மேற்கொள்ளவதற்காக குறித்த கண்காணிப்பு நன்னடத்தை உத்தியோகத்தர்களின் ஆலோசனைகளுக்கு அமைய நிறுவனத்திற்குப் பொறுப்பான முகாமையாளர் மூலமாக மாகாண ஆணையாளரின் அனுமதியினைப் பெறுவதற்காக கீழ்க்குறிப்பிடுபவர்களை உள்ளடக்கியதாக நிறுவுதல் குழுவின் கூட்டம் நடாத்தி தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்.

1. மாகாண ஆணையாளர் / உதவி ஆணையாளர்
2. சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்
3. நிலையத்துக்குப் பொறுப்பான நன்னடத்தை உத்தியோகத்தர்.
4. மேற்பார்வை நன்னடத்தை உத்தியோகத்தர்.
5. தொண்டர் அமைப்புக்களின் அங்கத்தவர்கள்
6. சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் காப்பாளர்கள்
7. முகாமைக்குழுவின் அங்கத்தவர் ஒருவர்
8. பெற்றோர் பாதுகாவலர்
9. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்
10. தேவைக்கு ஏற்ப ஏனைய அரச உத்தியோகத்தர்கள்

6.2 சிறுவர்களை உள்வாங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

1. பெற்றோர்கள், பாதுகாவலர் இருக்கின்ற மற்றும் பெற்றோர்களையும் பாதுகாவலர்களையும் தேடிக்கொள்ள கூடிய ஒவ்வொரு பிள்ளைகளையும் அவர்களிடம் பொறுப்பளித்தல்
2. பெற்றோர்கள், பாதுகாவலர் இருக்கின்ற போதிலும் அவர்களுக்கு பிள்ளைகள் தொடர்பில் கடமையாற்ற முடியாத சந்தர்ப்பங்களின் போது அதற்கென வேறு தகுதியானவர்களின் பொறுப்பில் பிள்ளைகளுக்கு பராமரிப்பு வழங்கல்.
3. வளர்ப்பதற்காக பெற்றோரின் பாதுகாவலர்களின் முறையான விருப்பம் கிடைக்கப்பெற்றுள்ள பிள்ளைகளை சட்டத்திற்கு உட்பட்ட விதத்தில் பிள்ளைகளாக வளர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்
4. குறுகிய காலமாக அல்லது நீண்ட காலமாக பிள்ளைகளுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையில் வளர்ப்பு பெற்றோர்களிடம் பொறுப்பளிக்க ஏற்பாடு செய்தல், அல்லது இல்லத்திற்கு வருகின்ற வளர்ப்பு பெற்றோர்களால் பார்க்கக்கூடிய வகையில் அவர்களை இனங்கண்டு அதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
5. பிள்ளைக்கு நன்மைகிடைக்க கூடிய வகையில்பிள்ளைக்கு உதவி வழங்குவதற்கு முன்வரும் பெற்றோர்களை தேர்ந்தெடுத்தல்
6. தொழில்வாய்ப்புகளை தேடிக் கொடுத்தல் அல்லது தொழிலை தேடிக் கொள்வதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்
7. தொழிலொன்றை செய்வதற்கு வாய்ப்பளிப்பதற்கும் தொழிலை தேடிக்கொள்வதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்
8. சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு விரும்புகின்ற பிள்ளைகளுக்கு தேவையான வழிகாட்டல்களும் ஆலோசனைகளையும் பொருளாதார உதவிகளை பெற்றுக்கொடுத்தல்
9. பொருத்தமான வகையில் திருமணம் செய்து கொடுத்தல்
10. வேறு சிறந்த மாற்று செயல் முறைகளை மேற்கொள்ளல்

6.3 வெளிநபர்களை நிறுவுதல், குழுவிற்கு சேர்த்துக் கொள்ளாமலிருத்தல்.

6.4 சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் உட்படுத்தப்பட்ட ஒரு பிள்ளையை நிலையத்திலிருந்து நீக்குதல், வேறொரு சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு மாற்றுதல் பெற்றோர்களிடம் பொறுப்பளிப்பது அல்லது தங்கியுள்ள காலத்தை நீடித்தல் போன்ற விடயங்களை நிறுவுதல் என்பவற்றை குழு தீர்மானித்திருத்தல் வேண்டும்.

6.5 மேற்கு குறிப்பிடப்படும் நிறுவுதல்குழு குறைந்த பட்சம் 4 மாதத்திற்கு ஒரு முறையாவது ஒன்றுகூடல்களை நாடாத்துதல் வேண்டும்.

7. பொது விடயங்கள்:

7.1 ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலும் அந்தந்த பிள்ளைகளுடைய மத வழிபாடுகளில் ஈடுபடக்கூடிய வசதிகள் காணப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கான வேலைத்திட்டமொன்று தயாரித்திருத்தல் வேண்டும்.

7.2 பராமரிப்பாளர்கள் அல்லது முகாமையாளர்கள் பிள்ளைகளுடைய மத நம்பிக்கைக்கு எதிராக செயற்படலாகாது.

7.3 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் கண்காணிப்பு நன்னடத்தைகள் உத்தியோகத்தர்களோடு கலந்துரையாடல்கள் மேற்கொண்டு ஒவ்வொரு பாடசாலை விடுமுறை காலத்திலும் விசேடமாக கவனத்திற்கு கொள்ளத்தக்க அளவில் தடைகள் ஏதும் இல்லையாயின் தனது சொந்த இல்லத்திற்கு அல்லது உறவினரின் இல்லமொன்றுக்கு செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பம் இருக்கும் எந்த ஒரு பிள்ளையையும் பாடசாலை விடுமுறை காலத்தில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் தங்க வைக்கப்படல் கூடாது.

7.4 தங்கியுள்ள சிறுவர்கள் விரும்புவார்களாயின் சாரணர் குழுக்களுக்களுடன் இணைவதற்கும் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

7.5 சில மாதங்களுக்கு ஒரு முறை தங்கியுள்ள அனைத்து பிள்ளைகளையும் கல்வி சார்ந்த / வினோத / வணக்கஸ்தளங்களுக்கான சுற்றுலா ஒன்றிற்கு அழைத்து செல்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7.6 பிள்ளைகளின் பெற்றோர்கள் மற்றும் பொறுப்பாளர்களுடனான தொடர்புகளை வளர்க்கக் கூடிய வகையிலான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

7.7 பிள்ளைகளினால் எழுதப்படுகின்ற கடிதங்கள், அவர்களின் பெயருக்கு கிடைக்கின்ற கடிதங்கள், பெற்றுக் கொள்கின்ற தொலைபேசி அழைப்புகள் அவர்களால் நடாத்திச் செல்லப்படுகின்ற டயரிகள் என்பவற்றை அலுவலர் குழுவினால் அல்லது வேறொருவரால் விசேட காரணமின்றி ஆராய்தல் கூடாது. ஏதேனும் காரணம் ஒன்றிற்காக அவ்வாறு ஆராயப்படுமாயின் அது பற்றிய குறிப்பு ஒன்றை விடயக் கோவைக்கு உட்படுத்தி அது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பொருத்தமானது என்பதாக குறைந்த பட்சம் இரண்டு அலுவலர்களுடைய அனுமதியையாவது பெற்றுக்கொண்டதாக சம்பந்தப்பட்ட கோவையில் குறிப்பிடுதல் வேண்டும்.

7.8 சிறுவர்அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நியமிக்கப்படுகின்ற ஆலோசனைக் குழு அங்கத்தவர்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினுள் விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு இடமளித்தல் வேண்டும்.

7.9 சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு உள்நாடு அல்லது வெளிநாடு ரீதியிலாக கிடைக்கின்ற நிதி மற்றும் பொருட்கள் தொடர்பாக முறையான அடிப்படையில் கணக்குப் புத்தகங்களிலும் பொருட்கள் பதிவேடுகளிலும் பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7.10 சிறுவர் அபிவிருத்தி நிலையம் வெளிநாட்டு நிறுவனங்களோடு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற சகல விதமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பேணுவதற்காக எண்ணுகின்ற தொடர்புகள் குறித்தும் இல்லத்தை மேற்பார்வை செய்கின்ற நன்நடத்தைகள் உத்தியோகத்தர் ஊடாக மாகாண ஆணையாளரின் பூர்வாங்க அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் தற்போது பேணப்பட்டு வருகின்ற தொடர்புகள் குறித்து அறிவித்தல் வேண்டும்.

7.11 தங்கியுள்ள பிள்ளைகள், அவர்களுடைய வயதைக் கவனத்திற்கு கொண்டு அவர்களுடைய நலன்கருதி "குழுக்களாக" பிரிப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். (மானெல் இல்லம், திஸ்ஸ இல்லம் என்ற அடிப்படையில்).

7.12 கட்டுபாட்டுக்கு உட்படாத பிள்ளைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளானது மேற்பார்வை நன்னடத்தை உத்தியோகத்தரின் ஆலோசனைக்கு இணங்க எழுத்து மூலம் குறிப்பிடுதல் வேண்டும்.

7.13 மேற்குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கட்டுப்பாட்டுக்கு உட்படாத பிள்ளைகள் தொடர்பாக கீழ்க் குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது

1. உடல் ரீதியிலான தண்டனைகளை வழங்கல்;

2. உள ரீதியிலாக வேதனைக்கு உட்படுத்தக் கூடிய செயல்கள்.

7.14 சிறுவர் அபிவிருத்தி சபையின் ஊழியர் குழாமின் அங்கத்தினர்களின் பிள்ளைகள் இங்கு தங்கியிருக்க கூடியபிள்ளைகளாக இருப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட கூடாது.

**08. சிறுவர்களின் பங்களிப்பு :**

8.1 ஏதேனும் சிக்கல் ஒன்றை எதிர் நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் அது குறித்து அபிவிருத்தி நிலைய பாராமரிப்பாளர்/ நிர்வாகக் குழு, நன்னடத்தை உத்தியோகத்தரிடம் அறிவிக்கக்கூடிய வகையிலான செயல் திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும்.

8.2 அன்றாடம் தனது வாழ்க்கையை நேரடியாக தொடர்புபடுகின்ற நலன்புரி சார்ந்த விடயங்கள் தொடர்பாக சிறுவர்களுடைய கருத்துக்களை கவனத்திற் கொண்டு அவற்றுக்கு அமைவாக செயல்படுவதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.கருத்துகள், பரிந்துரைகள் உரையொன்றில் உள்ளிட்டு பாதுகாப்பாக வைக்க வேண்டியதுடன், அதனை திறக்கும் பொறுப்பு கண்கானிப்பு நன்னடத்தை உத்தியோகத்தருக்கே உண்டு.

**09. பிள்ளைகளுடைய எதிர்கால நலன்களை கவனத்தில் கொள்ளல் :**

9.1 ஒரு பிள்ளை சிறுவர் இல்லத்தை சேர்ந்து 30 நாட்கள் நிறைவு பெறுதற்கு முன்பு பிள்ளைக்காக நன.சி.சே 50 படிவத்திற்கு அமைய அவர்கள் குறித்த எழுத்துமூல பாதுகாப்புத் திட்டம் ஒன்று (செயற்றிட்டமொன்றை) தயாரிக்கப்படல் வேண்டும்.

9.2 அந்த பாதுகாப்புத் திட்டத்தில் இங்கு கீழே குறிப்பிடப்படும் விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்:-

1. பிள்ளையின் கடந்த கால செயற்பாடுகளை கவனத்திற் கொண்டு அவர்களுடைய தேவைகளை இணங்கானல்.

2. பிள்ளைகளுக்கு நிறைவேற்றுவதற்காக எதிர்பார்க்கின்ற நோக்கங்கள்;

3. அந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

4. பிள்ளைகள் தொடர்பான கல்வித் திட்டம்;

5. பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல், மேம்படுத்தல், முன்னெடுத்தல் தொடர்பான செயற்பாடுகள்;

6. பிள்ளைக்கு பெற்றுக்கொடுக்கவேண்டிய விஷேட சேவைகள் ஏதும் இருப்பின் அச்சேவைகள்.

7. கீழ்க் குறிப்பிடப்படுகின்ற அடிப்படையில் பிள்ளையை மீண்டும் சமூகத்திற்கு இணைப்பதற்காக தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டம்.

8. வைத்திய ஆலோசனைகளின் பிரகாரம் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்

9.3 பாதுகாப்பு திட்டத்தின் உள்ளடக்கம்

- பிள்ளை வசிக்க வேண்டிய இடம்.
- பிள்ளைக்கு யாரால் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது
- மீண்டும் ஒரு முறை பிள்ளை சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் சேர்வதை தவிர்த்தல்.
- பிள்ளைகளை பராமரிப்பது எவ்வாறு என்ற விடயம்

9.4 சிறுவர் தொடர்பாக திட்டமொன்றை தயாரிக்கும் போது கீழ்க்குறிப்பிடப்படும் நபர்களை இணைத்துக் கொள்ளல் வேண்டும்:-

- பிள்ளையின்பெற்றோர்அல்லது பாதுகாலர்
- பிள்ளை
- சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பராமரிப்பாளர்
- சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்.

9.5 பிள்ளை தொடர்பான திட்டத்தை தகுந்த காலத்தில் கலந்துரையாடல்கள் மேற்கொண்டு தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

9.6 ஏதேனும் ஒரு காலப்பகுதிக்காக (ஓராண்டிற்கு, இரண்டு ஆண்டிற்கு, ஆகக்கூடிய வகையில் மூன்று வருடங்களுக்கு) சேர்க்கப்பட்ட பிள்ளை, குறித்த காலப்பகுதி பூர்த்தியடைவதற்கு முன்னர் மீண்டும் அவருடைய குடும்பத்தோடு / பொறுப்பாளரிடம் அல்லது உறவினரிடம் கையளிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளும் பாதுகாப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற காலம் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

9.7 வெளியாட்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிலையத்தினுள் இருப்பிட வசதிகள் வழங்குவது தவிர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் அவர்களுக்கான வசதிகள் நிறுவனத்திற்கு வெளியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9.8 சிறுவர் அபிவிருத்தி நிலையம் நடாத்துதல் தமது அமைப்பின் யாப்புக்கு அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.

03-507

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.